**தலைப்பு 21 – கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.1, 3.1.2 மற்றும் 3.1.3 ஆம் அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்ட வருமானக் குறியீடுகளுக்குரிய வருமானக் கணக்கும், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக் கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்கள் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 21 – கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான

செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தி முதல் 2.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில்இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தா; அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2. 2 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு | 1. நிலுவை வருமான அறவிடுவதற்கு தவறியிருந்தமை | 2.4 |

| | | |
|---|---|---|
| அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | 2. நிலுவையான அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு முடியாதிருந்தமை | 2.5 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

### 2.1 திணைக்களத்தின் பிரதான கடமைகள்

--------------------------------------------------------------

(அ) வளங்களை தம்வசம் வைத்துள்ள நிறுவனங்களின் முகாமைத்துவங்கள் அவர்களுக்கு கையளிக்கப்பட்ட பொதுக் கணக்களிப்பொறுப்பினை நிறைவேற்றியுள்ளனரா என உறுதிப்படுத்தி சுயாதீன பரிசோதனையொன்றை மேற்கொள்ளல் மற்றும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்

(ஆ) பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகிய இரண்டு பாராளுமன்ற கண்கானிப்புக் குழுக்களிற்கும் உதவுதல்.

(இ) கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களிற்கு அவற்றின் கணக்களிப்பொறுப்பினை முன்னேற்றிக் கொள்வதற்கு முகாமைத்துவ அறிக்கையினூடாக பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவுதல்.

### 2.2 திட்டமிடல்

-----------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அத்திட்டத்தில் கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் (Activity Plan), செயற்படுத்தப்பட வேண்டிய காலச்சட்டகம் (Time Line) மற்றும் செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் ‘ பெறுபேறுகள் (Output/Input) மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தினால் வருமான சேகரிப்பு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த 04 ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2014 | மீண்டெழுபவை | 814.90 | 779.34 | 35.56 | 4.36 |
| | மூலதனம் | 227.20 | 187.59 | 39.61 | 17.43 |
| | மொத்தம் | **1,042.10** | **966.93** | **75.17** | **7.21** |
| 2015 | மீண்டெழுபவை | 1,157.65 | 1,138.33 | 19.32 | 1.67 |
| | மூலதனம் | 28.22 | 19.83 | 8.39 | 29.73 |
| | மொத்தம் | **1,185.87** | **1,158.16** | **27.7** | **2.34** |
| 2016 | மீண்டெழுபவை | 1,240.35 | 1,147.43 | 92.92 | 7.49 |
| | மூலதனம் | 185.28 | 182.61 | 2.67 | 1.44 |
| | மொத்தம் | **1,425.63** | **1,330.04** | **95.59** | **6.71** |
| 2017 | மீண்டெழுபவை | 1,455.86 | 1,371.52 | 84.34 | 5.79 |
| | மூலதனம் | 137.50 | 134.59 | 2.91 | 2.12 |
| | மொத்தம் | **1,593.36** | **1,506.11** | **87.25** | **5.48** |

**2.4 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் மீளாய்வாண்டிற்காக 20.03.02.01 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 125.00 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 144.60 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 19.60 மில்லியனால் அதாவது 15.68 சதவீதத்தால் விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 99 கணக்காய்வு நிறுவனங்களிலிருந்து ரூபா 42.77 மில்லியனான கணக்காய்வுக் கட்டணங்கள் 05 ஆண்டுகள் முதல் 34 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) அரசாங்கத்திற்கு சொந்தமான, நிறுவனத்தை மூடுதல், ஒன்றிணைத்தல், மீளமைத்தல், விற்பனை செய்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் தற்போது செயற்படாத மட்டத்தில் காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந் நிறுவனங்களிலிருந்து ரூபா 6.56 மில்லியனான கணக்காய்வு கட்டணங்கள் நிலுவையாக காணப்பட்டன. அந்நிலுவை வருமானங்களை பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது.

**2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 02101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 65.00 | 64.91 | 52.00 | 53.60 | 228.00 | 226.45 |

**நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 2.23 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் மீதிகள் நிலுவையாக காணப்பட்டன. அந்நிலுவையான மீதிகளில் 03 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**2.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 1,225.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 705,642 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 355 | 261 | 94 |
| (ii) | மூன்றாம் நிலை | 1,215 | 1,146 | 69 |
| (iii) | இரண்டாம் நிலை | 175 | 146 | 29 |
| (iv) | ஆரம்ப நிலை | 213 | 184 | 29 |
| | மொத்தம் | 1,958 | 1,737 | 221 |

மீளாய்வாண்டின் இறுதி வரை திணைக்களத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 221 ஆக இருந்ததுடன், அதில் 163 கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக நேரடியாக தொடர்புறும் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்களை கொண்டிருந்தது. அவ்வெற்றிடங்கள் காணப்பட்டமை திணைக்கள்தின் செயலாற்றலை நிறைவேற்றுவதற்கு தடையொன்றாக இருந்தது.